முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 285/2013

நாள். 17.07.2025 பி.வா.சா.3 – திரு.செல்லப்பா

த/பெ - திரு.சீனி நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) 4 செண்ட் இடத்திற்கு மேற்கே 10 லிங்க்ஸ் அகல பாதைக்கு மேற்கே உங்களுக்கு பாத்தியப்பட்ட சொந்த வீடு உள்ளது என்றால் சரி தான். தாவா சொத்தில் ஆதி காலத்தில் ஒரு வீடு இருந்தது என்றால் சரி தான். நீங்கள் சொல்லும் உங்களுடைய வீடு வழக்கு வாதியின் தகப்பனார் தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்த காலத்தில் எங்களுடைய 10 லிங்க்ஸ் அகல பாதைக்கு மேற்கே இருந்தது என்றால் சரி தான்.

2) உங்களுடைய வீட்டின் பழைய கதவு எண்.14/128 ஆகும். அதன் பிறகு என்ன கதவு எண்ணாக மாறியது என்றால் 14/331 ஆக மாறியது. உங்கள் வீட்டிற்கு அடுத்த கீழ்புறம் உள்ள 10 லிங்க்ஸ் பாதைக்கு அடுத்து கீழ் புறம் வாதியின் தகப்பனார் முத்து வேல் நாடார் அவரது குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. செல்ல தங்கம், வசந்தி, சாந்தி ஆகியோர் வசித்து வந்தார்கள். மேற்படியாரின் தாயார் பெயர் என்ன என்றால் செல்ல தங்கம் ஆகும். நீங்கள் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.17 14:42:11 +0530

3) தாவா சொத்தில் நீங்கள் கூறுவது போல் செல்ல தங்கம் அம்மாள் மற்றும் அவரது மக்கள் குடியிருந்து வரவில்லை என்றும் வாதியின் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் குடியிருந்து வந்தனர் என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தை படித்து பார்த்துள்ளீர்களா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த உயில் ஆவணமானது 1989 ம் ஆண்டு அவருடைய 70 வயதில் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

4) அந்த உயில் ஆவணத்தில் 1989 ல் செல்ல தங்கம் அம்மாளின் மகள் வசந்தியின் வயது 16 என்றும் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரி தான். 1989 ல் 16 வயது என்றால் வசந்தியின் பிறந்த வருடம் 1973 என்றால் சரி தான். சுந்தரராஜம்மாள் மற்றும் அவரது மைனர் மக்கள் அனைவரும் சேர்ந்து கூடுதல் 1 வது குற்றவியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் ஜீவனாம்ச வழக்கு எண். 115/1973 ல் பிறந்த உத்தரவுக்கு எதிராக 1974 ம் ஆண்டு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு சீராய்வு மனு எண். 288/1974 முத்து வேல் நாடார் மனு தாக்கல் செய்திருந்தார் என்றும் அந்த மனுவில் பத்தி 5 ல் செல்லதங்கம் அம்மாள் என்பவர் ரெங்கசாமி என்பவரின் மனைவி என்றும் குறிப்பிட்டு மனு தாக்கல் செய்திருக்கிறார்,

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.17 14:42:17 +0530

5) எனவே உயில் ஆவணத்தில் சொல்லப்பட்டவாறு வசந்தி என்பவர் முத்து வேல் நாடாரின் மகள் அல்ல என்றும் ஆவண ரீதியாக புலப்படுகிறது என்றால் சரியல்ல. உயர் நீதிமன்றத்தில் 25.06.1976 ம் வருடம் உத்தரவு பெறும் வரை தனக்கு வசந்தி என்ற மகள் இருப்பதாக எந்த குறிப்பும் உயர் நீதிமன்றத்தில் சொல்ல வில்லை என்பதால் நீங்கள் குறிப்பிடும் உயில் ஆவணம் என்பது பொய்யானது என்றால் சரியல்ல.

6) நீங்கள் குறிப்பிடும் முத்துவேல் நாடாரின் இளைய மனைவி மற்றும் அவருடைய மக்கள் நான் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கே உள்ள வீட்டின் கதவு எண். 14/126 சி என்றால் எனக்கு கதவு எண் தெரியாது. நீங்கள் சொல்வது போல் செல்லதங்கம் அம்மாள் மற்றும் அவரது பிள்ளைகள் யாரும் தாவா சொத்தில் குடியிருந்ததில்லை என்றால் சரியல்ல.உங்களுடைய எந்த வயது காலத்தில் முத்து வேல் நாடாரின் இளைய மனைவி குடியிருந்து வந்ததாக கூறுகிறீர்கள் என்றால் என்னுடைய 20 வயதில் அவர்கள் அங்கு குடியிருந்து வந்தனர்.

7) தற்போது உங்களுடைய வயது என்றால் 75 வயதாகிறது. ஆக 2005 , 2009 கால கட்டத்தில் செல்ல தங்கம் அம்மாள் மற்றும் அவர்களது பிள்ளைகள் குடியிருந்து வந்ததாக கட்சி செய்து வருகிறீர்கள் என்றால் சரி தான். நீங்கள் வழக்கிற்காக பொய்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.17 14:42:23 +0530

சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு வாதி உங்களுக்கு ஒரு வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரி தான். அதற்கு நான் வா.சா.ஆ.7 பதில் அறிவிப்பை வழக்கு வாதிக்கு நேரடியாக அனுப்பினேன்.

8) இந்த வழக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் வரை தாவா சொத்து காலிமனையாக இருந்தது என்றால் சரி தான். அதன் பிறகு சொத்து உங்களுக்குரியது என அனுபவத்தை எடுத்துக் கொண்டீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு வாதி மற்றும் அவரது தாயார் சுந்தரராஜம்மாள் மற்றும் குழந்தைகள் எந்த தெருவில் எந்த கதவு இலக்கத்தில் குடியிருந்து வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. உங்கள் வீட்டு கதவு எண்ணிற்கு மேற்கு பக்கம் என்ன உள்ளது என்றால் தெரு உள்ளது.

9) உங்கள் வீட்டிற்கு வடக்கே உள்ள வீட்டின் கதவு எண் என்ன என்றால் நான் பார்க்கவில்லை, அதனால் எனக்கு தெரியாது. நீங்கள் குடியிருக்கும் வீட்டின் தெரு பெயர் என்ன என்றால் பஸ் ஸ்டாண்டு தெரு ஆகும். சி.எஸ்.ஐ. சர்ச் தெரு என்பது நான் குடியிருக்கும் வீட்டிற்கு 10 வீடு கிழக்கே தள்ளி உள்ளது. எங்கு உள்ளது என்றால் கிழக்கே உள்ளது. உங்கள் கிரைய ஆவணத்தின் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். தாவா சொத்து என்பது வழக்கு வாதிக்கு

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.07.17 14:42:31 +0530

வாரிசுரிமையின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றும் எனவே, நீங்கள் கூறும் உயில் ஆவணம் போலி என்பதால் வழக்கு வாதி வேண்டியவாறு பரிகாரம் கிடைக்கக் கூடியது என்றால் சரியல்ல.

10) வழக்கில் 6 செண்டு இடம் காட்டப்பட்டுள்ளது என்றால் அதில் 2 செண்டு இடம் 1ம் பிரதிவாதி ஆசீர்வாத நாடாருக்கு பாத்தியப்பட்டது ஆகும். 4 செண்டு இடத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன். அதனால் இந்த வழக்கில் யாரை அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டு கூறாததால் தேவையான தரப்பினர் சேர்க்காத காரணத்தால் வழக்கு குறை உடையது என்று கூறுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. முத்து வேல் நாடார் சொத்தில் தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எதையும் நீங்கள் கிரையம் வாங்கவில்லை என்றால் சரி தான்.

11) அதனால் முத்து வேல் நாடாரின் இதர சொத்துக்களை வழக்கில் சேர்க்க வேண்டும் என்று கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகாவது 2 வது மனைவியான செல்லதங்கம் அம்மாளிடம் நேரில் சென்று அவரிடம் தாவா சொத்தில் குடியிருந்து வந்ததை நிரூபிப்பதற்கு ஆவணத்தை தரக் கேட்டீர்களா என்றால் எனக்கு நேரடியாக தெரியும் என்பதால் நான் கேட்கவில்லை.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.17 14:42:38 +0530

குடியிருந்தது தொடர்பாக ஆவணம் ஏதாவது கேட்டீர்களா என்றால் கேட்கவில்லை. ஆனால் ரிக்கார்டு எழுதி தந்திருக்கிறார்கள்.

12) உயில் ஆவணம் எழுதும் கால கட்டத்தில் நீங்கள் உடன் இருந்தீர்களா என்றால் நான் செல்லவில்லை. உயில் ஆவணம் பொய் என்றால் சரியல்ல. எனவே, வழக்கு வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.17 14:42:45 +0530